**இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) - 2013**

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1949 இன் 58 ஆம் இலக்க நாணய சட்ட அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக்கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைய பரீட்சிப்பதற்கு பொதுச் சேவையிலுள்ள பட்டய கணக்காளர் நிறுவனமொன்றின் உதவிபெறப்பட்டது.

**1.2 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களானவை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்ட செலவினம் தொடர்பான பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

| செலவினத்தின் விபரங்கள் | தொகை |
|---|---|
| | ரூபா |
| மாகாண அலுவலகங்களின் மெருகூட்டல் | 3,258,939 |
| தீ விபத்து தவிர்ப்பு படித்துறை | 5,364,072 |
| மாதிரிப் பண்ணை | 2,404,830 |
| மத்திய மையக் கட்டிடம் | 409,000,000 |
| வயிட் அவேஸ் (White Aowys) கட்டிடம் | 400,000,000 |

### 2.2.2. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1949 இன் 58 ஆம் இலக்க நாணயச்சட்ட அதிகாரச்சட்டம் | |
| (i) பிரிவு 39 | இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய ஒதுக்கீடுகள் மற்றும் தீர்ப்பனவு செய்த பின்னர் இலங்கை மத்திய வங்கியால் உழைக்கப்பட்ட இலாபம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான இலாபத்திடமிருந்து முற்பண கொடுப்பனவுகளாக 2013 இல் 7 சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரிக்கு ரூபா 25 பில்லியன் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக |

எஞ்சிய இலாபமாக இருந்த உழைப்புக்களிலிருந்து இன்னொரு ரூபா 3 பில்லியன் மாற்றப்பட்டிருந்தது. மேலும், சர்வதேச நிதி அறிக்கையிடல் முறைமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 24.26 பில்லியன் நட்டமாக இருந்தது. இருந்தபோதிலும், ரூபா 26.758 பில்லியன் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மதிப்பீட்டு இலாபம் மற்றும் 27.892 பில்லியன் வெளிநாட்டு சொத்துக்கள் மீது ‘‘சந்தைக்கு சந்தை’’ நட்டம் என்பன கணக்கிற்குள் எடுத்த பின்னர் இலங்கை மத்திய வங்கியால் பகிரக்கூடிய இலாபம் கணக்கிடப்பட்டிருந்தது.

(ii) பிரிவு 39(ஆ) இற்கான திருத்தம்

மொத்தச் சொத்திற்கும் தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயத்திலுள்ள சொத்திற்கும் இடையிலான வித்தியாசம் சதவீதமாக மொத்த பங்குடமை உரிமையாளர் 100 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டியதில்லை. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விகிதம் வேண்டப்பட்ட 100 சதவீதத்திற்கு எதிராக மீளாய்வாண்டு முழுவதும் 44 சதவீதம் முதல் 76 சதவீதம் வரையான வீச்சில் உள்ளன. நாணய சட்ட அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு 15 சதவீத விகிதத்திற்கு மேலான போதிய மூலதனத்தின் உள்ளக கண்காணிப்பிற்கான வரையறைகள் (Bench Marks) காலத்திற்கு காலம் நாணயச் சபையால் நிர்ணயிக்கப்பட்டிருந்ததென’’ இலங்கை மத்திய வங்கி ஆளுநர் எமக்கு தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், அரசாங்க பாதீடு 2014 இல் பிரேரிக்கப்பட்டவாறு ரூபா 50 பில்லியனிற்கு இலங்கை மத்திய வங்கியின் மூலதனத்தின்

| | |
|---|---|
| | மேம்படுத்தலுடன் நாணயச் சபை மேற்குறிப்பிடப்பட்ட தன்னார்வ விகிதத்தை இரத்துசெய்வதற்கு தீர்மானித்ததுடன் மேலதிக மூலதனம் ஏற்ற இடத்தில் புதிய சூழ்நிலைகள் காரணமாக அவசியமாக இருக்க வேண்டியதால் ஒவ்வொரு ஆண்டு நிதிக்கூற்றுக்களின் அங்கீகார நேரத்தில் குறிப்பிடப்படுகின்ற அத்தகைய வருடாந்த விகிதம் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) 1997 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) அதிகாரச் சட்டம் மற்றும் 2012 யூலை 06 இல் பொது முயற்சிகள் குழுவால் (சீஓபிஈ) வழங்கப்பட்ட நெறிப்படுத்தல் | இலங்கை மத்திய வங்கியால் உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு குழுவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக அதிகாரச்சட்டதிலுள்ள அதன் ஊழியர்களின் சார்பில் அதன் சொந்த நிதிகளிலிருந்து முறையே மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 178.1 மில்லியன் மற்றும் ரூபா 138.9 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையாக உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 66,209 மில்லியன் நேரொத்த தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 24,265 மில்லியன் தேறிய நட்டம் விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 41,944 மில்லியன் குறைபொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டில் ரூபா 25,182 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 26,759 மில்லியன் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு நட்டமாக இருந்ததுடன் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் மற்றும் வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்கள் என்பவற்றிலிருந்து தேறிய இலாபம் மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபத்தில் குறைவிற்கான காரணங்களாக இருந்த முன்னைய ஆண்டில் முறையே ரூபா 24,866 மில்லியன் மற்றும் ரூபா 30,608 மில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 11,470 மில்லியன் மற்றும் ரூபா 4,002 மில்லியனாக உள்ளன.

## 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு நாணய மாற்று நட்டமான ரூபா 26.8 மில்லியன் உட்பட தேறிய மொத்தச் செயற்பாட்டு வருமானம்/ (செலவினம்) ரூபா 12.8 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 25.2 பில்லியன் தொகையான தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபம் உள்ளடங்கலாக ரூபா 75.9 பில்லியன் ஆக இருந்தமையால் மொத்த தேறிய செயற்பாட்டு வருமானத்தில் 117 சதவீத குறைவு நிருமாணமாகியது. எனினும் முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் என்பன உள்ளங்கலாக செயற்பாட்டுச் செலவினமான ரூபா 7.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 9.4 பில்லியனாக இருந்தது. ஆதலால், 32 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போதான இலங்கை மத்திய வங்கியின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டுல மாற்றங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | 2013 | 2012 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | | | சாதகம்/ (பாதகம்) | சதவீதம் |
| | ரூபா பில் | ரூபா பில் | ரூபா பில் | % |
| வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் | 4.0 | 30.6 | (26.6) | 87 |
| வெளிநாட்டு நாணய நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம் | 4.4 | 5.7 | 1.3 | 23 |
| வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) | (26.7) | 25.1 | (51.8) | 206 |
| உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் | 11.5 | 24.8 | (13.3) | 54 |
| செயற்பாட்டுச் செலவினம் | 9.4 | 7.1 | (2.3) | 32 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | (24.2) | 66.2 | (90.4) | 136 |

## 3.3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 இலங்கையில் நிதி முறைமையின் திடத்தன்மை பேணுதலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்

**(அ) தோல்வியுற்ற நிதிக்கம்பனிகள் மீதான மேற்பார்வை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 1988 முதல் 1994 வரையான காலத்தின் போது 06 தோல்வியடைந்த நிதிக் கம்பனிகளிற்கு வழங்கியிருந்த ரூபா 6.1 பில்லியன் தொகையான நிலுவையான கடன்கள் மற்றும் மீள்நிதி வசதிகளையும் பதிவழிப்பதற்கு 2011 மார்ச் 21 இல் அனுமதியை நாணயச் சபை வழங்கியிருந்தது. பின்னர் நாணயச் சபையானது கணக்கொழிப்பு கோருவதற்கும் 2011 செப்தெம்பர் 01 இல் தீர்மானித்தது. ரூபா 317.1 மில்லியன் மொத்த பதிவழிப்பு பெறுகைகளில், மேற்குறிப்பிட்ட தீர்மானத்தின் பின்னர் 2014 செப்தெம்பர் மாத இறுதிவரை இலங்கை மத்திய வங்கியால் ரூபா 18.4 மில்லியன் தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(ii) 2013 இல் நிதிக் கம்பனியொன்று வைத்திருந்த வைப்பு பொறுப்புக்கள் ரூபா 3.5 பில்லியன் திவாலாகி இருந்ததுடன் நிதித் துறையின் ஒண்றிணைந்த பிரதான திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டது.

### 3.3.2 நாணய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நகர்வு மிகவும் மெதுவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. ஆதலால், அவற்றின் மீதான பொதுமக்கள் கேள்வி குறைவைக் காட்டுகின்றது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலிருந்த அத்தகைய நினைவுச்சின்ன நாணயக் குற்றிகளின் இருப்பு நிலைமை கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | வழங்கிய ஆண்டு | முகப் பெறுமதி ரூபா | அச்சிடப்பட்ட குற்றிகளின் எண்ணிக்கை ரூபா | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலவறையிலுள்ள குற்றிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2500 பௌத்த ஜயந்தி | 1957 | 5 | 500,000 | 20,167 |
| சனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பதவி ஏற்கின்ற 3 ஆவது ஆண்டு நிறைவு | 1993 | 1 | 2,500 | 746 |
| ஐ.நா சபையின் 50 ஆண்டு நிறைவு | 1995 | 5 | 5,000 | 3,948 |
| இலங்கையின் 50 ஆவது சுதந்திர தினம் | 1998 | 1,000 | 25,000 | 6,678 |
| கிறிகெற் உலக கோப்பை- 1996 | 1999 | 1,000 | 25,000 | 10,153 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 2,000 | 10,000 | 8,416 |
| 2550 பௌத்த ஜயந்தி | 2006 | 1,500 | 20,000 | 18,687 |
| கிறிகெற் உலக கோப்பை- 2007 | 2008 | 1,000 | 10,000 | 7,981 |

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் நாணயத் தாள்கள் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பியகம தனியார் கம்பனியொன்றால் அச்சிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட தனியார் கம்பனியால் அச்சிடப்பட்ட நாணயத்தாள்களில், அரைவாசி அச்சிடப்பட்ட ரூபா 1,000 மற்றும் ரூபா 500 பெறுமதியான 2,835 தாள்கள் கம்பனியின் ஊழியர்களால் திருடப்பட்டிருந்ததுடன் இது 2014 யூலை 02 இல் புதினப்பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. மேலும், நாணயத்தாள்கள் அச்சிட்ட பின்னர் அச்சிடப்படுகின்ற தாள்களின் சேதமடைந்த தாள்கள் மற்றும் அகற்றவேண்டியவைகளின் அழிப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களம் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சொல்லப்பட்ட அழிப்புகள் 2013 மார்ச் 21 இன் பின்னர் இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. சேதமடைந்த தாள்களின் பெறுமதி ரூபா 1,417,500 ஆக உள்ளன.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியின் பதினெட்டு ஊழியர்கள் 2013 திசெம்பர் 31 அளவில் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இலங்கை மத்திய வங்கியால் ஏற்பட்ட கிரயம் ரூபா 38.4 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 13.6 மில்லியன் தொகை மாத்திரமே நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிடமிருந்து மீளளிக்கப்பட்டிருந்தது.

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மத்திய வங்கியானது இலங்கை மத்திய வங்கி மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களின் வாகனங்களிற்கான வாகனத் தரிப்பிடங்களிற்கான காணியின் பயன்பாட்டிற்காக 2000 யூன் 02 இலிருந்து 99 ஆண்டு காலமாக ரூபா 100,485,000 தொகை செலவழித்து 133.98 பர்சேஸ் பரப்பளவுள்ள டிரான்ஸ்வேக்ஸ் சதுரக் காணியின் குத்தகை உரிமையை சுவீகரித்திருந்தது. பின்னர், காணித் துண்டு 2000 இல் கைச்சாத்திட்ட உடன்படிக்கையை இரத்துச் செய்யாமல் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருடன் அபிவிருத்தி செயற்திட்டமொன்றின் அமுலாக்கும் நோக்கத்துடன் நகர அபிவிருத்திச் சபையால் (யூடிஏ) மீள செயற்படுத்தப்பட்டிருந்தது. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை குத்தகை நிபந்தனைகளை தீர்ப்பனவு செய்யும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான குத்தகையுடமைக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 88,558,750 ஆக இருந்தது. இலங்கை மத்திய வங்கி மதிப்பீட்டின் பிரகாரம், காணியின் சந்தைப் பெறுமதி அண்ணளவாக ரூபா 1,200 மில்லியனாகும். இலங்கை மத்திய வங்கி சில நினைவூட்டல்களை அனுப்புவதன் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து செலுத்தப்பட்ட குத்தகை தவணைப் பணத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மத்திய வங்கி அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 500 மில்லியனிற்காக பொது நிர்வாக அமைச்சிடமிருந்து 2012 ஆம் ஆண்டில் (White Awoys Buliding;) கொழும்பு – 1, பரோன் ஜயத்திலக்க மாவத்தையில் கட்டிடமொன்றை ரூபா 500 மில்லியனுக்கு கொள்வனவு செய்திருந்ததுடன் கட்டிடத்தின் புதுப்பித்தலிற்காக ரூபா 75.7 மில்லியன் தொகை செலவழித்திருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் சிரேஸ்ட முகாமையாளரால் செய்யப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இந்த கட்டிடத்தின் சுவீகரிப்பு நோக்கம் ஆபத்து முகாமைத்து அளவீடாக புறம்பான அமைவிடத்தில் மேலதிகமாக வளவாக வைத்திருக்கவும் இலங்கை மத்திய வங்கியின் சில திணைக்களங்களின் நடுத்தர மற்றும் நீண்டகால விரிவாக்கலிற்கு வசதியளிப்பதற்குமாக இருந்தன. இருந்தபோதிலும், ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டிருந்த இரண்டு தனித்தனியான கட்டிடத்தைப் போன்று பிரதான கட்டிட வளவில் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கக்கூடிய மேலதிக கட்டிட இடத்தின் தரைப்பகுதயில் ஆபத்து முகாமைத்துவ அளவீட்டின் நோக்கத்திற்காக இன்னொரு கட்டிடத்தை கொள்வனவு செய்வதற்கான தீர்மானம் ஐயத்திற்குரிய விடயமாக இருக்கும்.

(இ) இலங்கை மத்திய வங்கி 2011 ஆகஸ்ட் 24 இல் ஐ.அ.டொலர் 6,207,116 (ரூபா 607,121,953) செலவழித்து நியூயோர்க்கில் கட்டிடமொன்றை கொள்வனவு செய்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் சொந்த நோக்கத்திற்காக கட்டிடத்தை பயன்படுத்தாமல் ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகையில் 2012 யூன் 01 இலிருந்து மூன்று ஆண்டு காலமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மேலும், நாணயச்சட்ட அத்காரச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், ‘‘இலங்கை மத்திய வங்கியானது அதன் கோரிக்கைகளின் ஏதாவது திருப்திப்படுத்தலின் போது கட்டாயமாக ஏதாவது கொள்வனவு செய்யப்படுவதாக அத்தகைய வட்டியைத் தவிர வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றக்கப்பட்டவைகளில் நேரடியாக அக்கறை வைத்திருந்த வியாபார அல்லது வேறு ஏதாவதில் ஊக்கப்படுத்தவில்லை’’ என்று குறிப்பிடுகிறது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இது தொடர்பில் குறிப்பட்டப்பட்டதாவது *‘‘ஐக்கிய அமெரிக்காவில் ஆதனத்தின் சந்தை பெறுமதி குறைவடையும் போது நியூயோக் ஆதனத்தை கொள்வனவு செய்திருந்தது. இதற்காக வங்கியினுடைய எதிர்கால செயற்பாடுகளின் பயன்பாட்டு நோக்கத்துடன் நடுத்தர வருமான பகுதியை நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்தலை நோக்கி நகரும் போது இது தனது சொந்த நோக்கத்திற்காக இந்த கட்டிடம் மத்திய வங்கிக்கு தேவைப்படுகின்ற நேரம் வரை இது ஆதனத்தின் முறையான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.*

### 3.7 சர்ச்சைக்குரிய விடயங்கள்

இலங்கை மத்திய வங்கி பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்கில் ஒரு ஆண்டு காலமாக 2013 மார்ச் 16 இல் வெளிநாட்டுக் கம்பனியுடன் உடன்படிக்கை கைசாத்திட்டிருந்தது.

(அ) இலங்கையினுடைய நீண்டகால அரசியல் மற்றும் பொருளாதார தளம்பல்களை மேம்படுத்துவதற்கு அதிகமாக நடாத்தப்பட்ட என்று ஐக்கிய அமெரிக்கா (யூஎஸ்ஏ) அரசியல் சூழலை பின்பற்றுவதற்கு

(ஆ) இலங்கையினுடைய தற்போதைய அடைதல்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றி தெளிவான மற்றும் உண்மையான தகவல்களை பெற்று ஐக்கிய அமெரிக்காவில் தீர்மானம் எடுத்தல் விரிவான தகவல் தளமொன்றை வழங்குதல் மற்றும்

(இ) ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு தனியார் துறை முதலீடுகளின் உயர்ந்த பரிமாணத்தை கொண்டுவருவதற்கு.

உடன்படிக்கையின் பிரகாரம், ஆண்டிற்காக உடன்பட்ட மொத்த சேவைக் கட்டணம் ரூபா 100 மில்லியனானதுடன் ஏதாவது மேலதிக சேவைகள் புறம்பாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட சேவைக் கட்டணத்தில் ரூபா 77.4 மில்லியன் 2013 திசெம்பர் 31 வரை மேற்குறிப்பிட்ட வெளிநாட்டுக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்தினுடைய வெளிநாட்டு கொள்கைக்கு அமைய இலங்கையின் சர்வதேச அக்கறைகளின் மேம்பாடு, செயற்முறை மற்றும் பாதுகாப்பு என்பன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொறுப்பாக உள்ளது. ஆகவே, இலங்கை மத்திய வங்கியின் மேற்குறிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபாடு இலங்கை மத்திய வங்கியின் நோக்கத்திற்கு முரண்பட்டதாக உள்ளது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) நாணய முகாமைத்துவம்

(ஆ) வங்கியல்லா நடவடிக்கைகளின் மேற்பார்வை

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) ஆதனங்களின் கணக்கீடு